## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 27/2015 C/W OS.122/2015 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | சந்திரசேகர் (எ) சந்திரசேகரன் | நாள் | 14.06.2023 |
| தகப்பனார் பெயர் | சண்முகம் | | |

**1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

34) இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை நான் தெரிந்து கொண்டேனா என்றால், தெரிந்து கொண்டேன்.

35) நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் நான் தற்போது ச.எண்.356/7A8 மற்றும், ச.எண்.356/5C ல் உள்ள நிலங்களில் வீடு கட்டி அதில் குடியிருந்து வருகிறேன் என சொல்லியுள்ளார் என்றால், ச.எண்.356/7A8 ல் மட்டும் தான் நான் குடியிருந்து வருகிறேன். ச.எண்.356/5C ல் நான் வசிக்கவில்லை.

36) ச.எண்.356/7A8 ல் உள்ள வீட்டிற்குரிய கதவு எண்.3/2–23A என்றால், சரிதான். மேற்படி சர்வே எண்ணில் எத்தனை வீடுகள் உள்ளது என்றால், பழைய வீடு ஒன்றும், புது வீடு ஒன்றும் ஆக இரண்டு வில்லை வீடுகள் உள்ளது.

37) ச.எண்.356/7A8 ல் உள்ள கதவு எண்.3/2–23A கொண்ட வீட்டில் தான் என் தந்தை இறக்கும் வரை வசித்து வந்தார் என்றால், சரிதான். நீதிமன்ற ஆணையர் அறிக்கையில், ச.எண்.356/7A4 ல் உள்ள நிலத்தில் மற்றொரு வீடு உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். அதன் கதவு எண். 3–7–47 என்றால், கதவு எண் எனக்கு நினைவில்லை.

38) கதவு எண். 3–7–47 கொண்ட வீட்டில் அருள்குமார், கவிதா, இந்திராணி ஆகியோர்கள் வசித்து வருகின்றனர் என்றால், சரிதான். ஆனால், என் அண்ணன் இறந்ததற்கு பின்னிட்டு அந்த வீட்டில் சுமார் 2 வருடங்களாக யாரும் வசிக்கவில்லை.

39) நான் சொல்வது தவறானது என்றாலும், என் அண்ணன் கோவிந்தராஜ் இறந்ததற்கு பின்னிட்டும் தற்போதும் மேற்படி வீட்டில்தான் அருள்குமார், கவிதா, இந்திராணி ஆகியோர்கள் வசித்து வருகிறார்கள் என்றால், சரிதான்.

(1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.